உ

சிவமயம்.

சிதம்பர நடராஜர்

பஞ்சாட்சரப்பதிகம்,

ஜோதிமயம், நடராஜப்பத்து, தனிவிருத்தம்,
சங்கப்புலவர், கண்டசுத்தி,
இவை ஐந்தும் அடங்கியிருக்கின்றன.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதறாஸ் என். சி.

1914.

உ

கடவுள் துணை.

சிதம்பரம் நடராஜர்

பஞ்சாட்சரப்பதிகம்.

வசியசிவ சங்கரா வசியகெங்காதரா வசியகைலாசவாசா, வசியபணி யணியுரா வசியமான் மழுகரா வசியசிவகாமிநேசா, வசியதிருநேத்திரா வசியபுவனேஸ்வரா வசியஓம்நடனபாதா, வசியகரியுரியழக வசியபுலிபிடையழக வசியசிரமாலையழகா, வசியவதி முடியழக வசியபசுபதியழக வசியமென் மனதில் வாவா, வசியமுன்னூலழக வசியவெண்ணீரழக வசியமறை பரவுமழகா, வசியவென உனைபணுதினப்போற்றுமடியார்க்கு அருள்மடை

திறந்ததில்லைக், கதிபதீஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௧)

சிவயநம வென்றுதின மோழ்கியுருவேற்றுவார் செய்தொழி லெலாம்வசியமாம், ஜெகவசியமாம்சகல முகவசியமாம்செய்ய சித்துகளெலா வசியமாம் வயநமசியென்றுவுரு மாட்டுவார்சத்ராதி வாளுட விட்டபந்தாம், வடங்காதபூதபேதம் பசாசிவையெலாம்வளர் குலாலன்திகிரியாம் யநமசிவ வயநமசி சிவயநம யெல்லாமுன் னடலமன்றோ, யிவ்வுலகபொருளுதவி அவ்வுலகமருளுதவியீய விருதெய்வமுளவோ, அவுணதி புவனதி கௌணதிமுத்தர்க்கு அருள்மடை திறந்ததில்லை, அதிபதீ ஜெனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௨)

புல்லாய்ப்பிறந்தாலு மிருகாதிஜெனனங்கள் பசியாறிமகிழுமென்றோ, பூண்டாய் பிறந்தாலும் புலத்தியர்கள் கொண்டுசில பிணிதீர்த்து புகழ்வரன்றோ, கல்லாய்ப்பிறந்தாலும் நல்லவர்கள் மிதிகொண்டு காட்சிக் குருத்துமன்றோ, கழுதையுருவந்தாலும் ஆவெனக்கத்திறல் கைக்கண்ட சகுனமென்பார், யெல்லாமிலாமலே யிப்பிறவிதந்தென்னையேங்கவிட்டகலிநின்றாய் யெத்தனை அன்னையினை மெத்தனை தந்தையின மெத்தனை பிறவிவருமோ, அல்லலெனுமாசறுத் தாட்கொளுந்தெய்வமே அப்பனே தில்லைநகர்வாழ், அதிபதீ ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௩)

கல்லாதமூடரைக் கயவரைக் காமுகரை கல்நெஞ்ச வஞ்சரிவரை கற்றும்றிவில்லாத மோழையைக்கோழையைக் கார்க்கவைத்துண்டபேரை, பொல்லாதமூர்க்கரை மிருகங்கள் போன்றவரை பொய்க்கு அஞ்சாதபேரை, பூமியிற் பிறருக்கு யிடுக்கமுயல்வோர்களை பிணமொத்த பேரை பலரை, நல்லாரெனக் கவிகள் சொல்லியலையாமல்நா ளுளாவதென்று சிவமே, நானன்றிநீயேது நீயன்றி நானேதுநா னுயுரைத்ததேது,அல்லிலும்பகலிலும்நீயிலாதசைவேது அருள்மடைதிறந்ததில்லைக், கதிபதீஜனகாதிதுதிபதிசிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௪)

ஜெகமெட்டுதிசைகளுங் கிரிகள்பலதெய்வமும் செம்பொன்மணிமாடமேடை, சேயன்னைதந்தையும் நானென்ற ஆணவஞ்செல்வமும் வல்லசித்தும், முகடேறுமெமனுக்கு முன்வந்து உதவுமோ முத்திக்கு வித்துமுளதோ மூவாசைவிட்டுகனி சறுகாதி தின்றாலும் முன்செய்தவினையகலுமோ, யிகமுனியசுகபோகம்நின்னருளலாதேதுயில்லையவ் வுலகமென்றால், யீசநீகாணாது யிருளேதுவெளியேது நீனேவேதுகனவுமேது, அகவுறவுபற்றற்றதுறவுறவுமுற்றற்ற ஆரியர்கள் பாவுதில்லை, அதிபதீ ஜெனகாதி துதிபதிசிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௫)

பஞ்சாட்சரப்பதிகம்-முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஜோதிமயம்.

——(*)——

யிந்ராதிமுதன்முனிவர் கொண்டாடு ஜோதியெண்
டிசைகாண வோங்குஜோதி, யிமைய பர்வதவல்லி கண்
கண்டஜோதி யென்யிருவினையறுக்கும்ஜோதி, சாலோக
சாமீப சாரூபமளவிடா சாயுச்யஜோதியிதுவே, சிந்தை
யில்நிமைப்போது ஐம்பூத சாட்சியாய்த் தெரிசனஞ்செ
ய்தபேர்க்கு, செய்தவினையேவல்கொடுசூன்யமுதல்பிணி
யெலாம் சென்மரந்திரத்துமணுகா, நந்தியொடுபுலியரவு
மூவாயிரம் பேரும் நான்முகனும் விண்கநடுவே, நற்சி
சோதிற்சோதி நவசோதி சிவசோதி யென்னம்மைசிவ
காமியுறவே. (க)

பருமதி திருவலம் செய்துத்தொழுஞ் ஜோதி பங்க
யன் வணங்குசோதி, பாரளந்தோன்தேடி காணாதசோ
தியது பார்வதிக்கண்டசோதி, சரியைகிரியாயோக ஞா
னமோ நத்தவர்கள் சதாநிஷ்டை செய்யும்சோதி, சன
காதி முனிவர்மன மகலாத சோதியது சச்சிதானந்த
சோதி, விரிவானயெண்பத்து நான்குலட்சஞ்ஜீவ பேத
த்தமர்ந்தசோதி, வினைப்பயனறிந்தந்த கருவிடைப்போக்

கியே வேடிக்கைபார்க்கும்சோதி, பருவமதியிரவியொடு பங்கயனுமின்ராதி பார்க்கவே கனகசபையில், பண்டுநடனச்சோதி விண்டு பரவுஞ் சோதி தில்லைச் சுயம்வரஞ் சோதியே. (௨)

பிஞ்சுமதி நதியை முடிமேற் பூண்ட சோதியாம்பணிமேலணிந்தசோதி, பேசறியமறையடியு நடுமுடியுமாஞ்சோதி பெண்கொடி மணர்ந்த சோதி, அஞ்செழுத்தாய்பஞ்ச பூதமாயென்னுடற் காதாரமானசோதி, அகிலபுவனங்களும்திக்குத்திகந்தமும் அங்கிங்கெனுதசோதி தஞ்சமெனு மடியாது நெஞ்சைத்திருத்தியே தன்னருட்காட்டுசோதி, தந்தைதாய் குருதெய்வம் தாரமாய் மகவுமாய் தானுமாயோங்குசோதி, கஞ்சனொடு விஞ்சையறு மஞ்சுவே கொஞ்சலொடு கனகசபைமீதுநாளும், கதித்தப்பெருஞ்சோதி துதித்தப்பெருஞ்சோதி கனகசபை சிவஜோதியே. (௩)

ஜாதிமதபேதமாம் சழக்கற்றமுதியோர் சமுகத்திலங்குசோதி, சதுர்மறையும் வேதமொடு தொண்ணூற்றியாறு தத்துவமெலாம் நின்றசோதி, சோதிமலைமீதிற் சுயஞ்சோதியாய்நின்று சோதித்தழைக்கும்சோதி, சும்மாவிருக்கும் சுகங்கண்ட மௌனியொடு சும்மாவிருக்குஞ்சோதி, நீதிபலபேசிமத வாதமிடு மடையரது நெஞ்சைப் பிளக்குஞ்சோதி, நின்றநிலை நின்றட்ட திக்கெலாமிரவுபகல் நிர்த்தமிடு நெடியசோதி, மாதுமலை

மங்கையொடு ஆதிசபைமீதில்வளர் மணிமந்ர தீபஜோதி, மதிசோதிரவிஜோதி சிவஜோதி தவஜோதி மங்கை சிவ காமியுறவே. (௪)

மாசிலாவாகம புராணமறை யாஞ்சோதி மகவாயு தித்தஜோதி, மன்னனது கிரிகையைத் தள்ளனென்றச் சோதி மலமகள் தழுவுஜோதி, தேசமிடாமாம்பொருள் வற்றவற்குஞ்சோதி தென்னவனைவீழ்ந்தஜோதி, தேவ ரிந்திரன் முனிவர் அமரர் கின்னரருகர் தேடக்களித்த ஜோதி, ஆசைவன்பாசமா மாயாசரக்கருணை யமுதன் பற் குதவுஜோதி, அன்பாம் பணிப்பூண்டு சிவசிவவெ னத்தேம்பு மவர்க்கேனடித்தஜோதி, மாசின்மலைசோலை குளிர் தீம்புனற்றில்லை மந்திரசபையிலென்றும், மதி ஜோதி ரவிஜோதி சிவஜோதி தவஜோதி மந்த்ரத்து சு யஞ்சோதியே. (ரு)

ஜோதிமயம்-முற்றிற்று.

உ

கடவுள் துணை.

நடராஜப்பத்து.

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறை நான்கின் அடிமுடியும்நீ, மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டலமிரண்டேழும்நீ, பெண்ணும்நீ ஆணு

ம்நீ பல்லுயிற்குயிரும்நீ பிறவும்நீ யொருவநீயே, பேதா திபேதம்நீ பாதாதிகேசம்நீபெற்றதாய்தந்தைநீயே,பொ ன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ போதிக்கவ ந்தகுருநீ, புகழொண்ணுகிரகங்க ளொன்பதும்நீயிந்த புவ னங்கள்பெற்றவனும்நீ, எண்ணரியஜீவகோடிகளீன்றவப் பனே என்குறைகளார்க்குரைப்பேன், யீசனேசிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (க)

மானுடமழுவாட மதியாடபுனலாட மங்கைசிவகா மியாட, மாலாட நூலாடமறையாடதிரையாடமறைதந்த பிரம்மனாட, கோனாடவானுலகுகூட்டமெல்லாமாடகுஞ் சரமுகத்தனாட, குண்டலமிரண்டாட தண்டைபுலி யுடையாட குழந்தைமுருகேசனாட, ஞானசம்பந்தரொடு யிந்திரர் பதினெட்டுமுனி யட்டபாலகருமாட, நரைது ம்பையறுகாடநந்திவாகனமாட நாட்டியப்பெண்களாட, வினையோட உனைபாட யெனைநாடியிதுவேளை விறதோடி ஆடிவருவாய், யீசனேசிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே (உ)

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருகொண்டு கனவென்றவாழ்வைநம்பி, காற்றென்ற மூவாசைமாறு தச்சுழலிலே கட்டுண்டு நித்த நித்தம், உடலென்ற கும்பிக்கி உணவென்ற யிரைதேடி ஓயாமலிரவும்பகலும், உண்டுண் டுறங்குவதை கண்டதே யல்லாது ஒருபயன

டைந்திலேனே, தடமென்ன மிடிகரையில் பந்துபாசங்க ளெனும் தாபரம் பின்னலிட்டு, தாயென்று சேயென்று நீயென்றுநானென்று தமியேனையிவ்வண்ணமாய், யிடையென்றகடைநின்று யேனென்றுகேளாதிருப்பதுன்னழகாகுமோ, யீசனே சிவகாமிநேசனே யெனையீன்றதில்லைவாழ் நடராஜனே. (௩)

டம்புசூனியமல்ல வைப்பல்லமாரணந் தம்பனம்வசியமல்ல, பாதாள வஞ்சனம் பரகாயபிரவேச மதுவல்ல சாலமல்ல, அம்புகுண்டுகள் விலக பொழியு மந்திரமல்ல ஆகாய குளிகையல்ல, அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல அறியமோகனமுமல்ல, கும்பமுனி மச்சமுனி சட்டமுனிபிர்ம்மரிஷி கொங்கணர்புலிப்பாணியும், கோரக்கர்வள்ளுவர் போகமுனி யிவரெலாங் கூறிடும் வயித்தியமல்ல, எம்மனதுன்னடிவிட்டு நீங்காதுநிலைநிற்கயேதுளவு புகலவருவாய், யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (௪)

நொந்துவந்தேனென்று ஆயிரஞ்சொல்லியும் செவியென்னமந்தமுண்டோ, நுட்பநெறியறியாதபிள்ளையைப்பெற்றபின் நோக்காத தந்தையுண்டோ, சந்ததமுந்தஞ்சமென் றடியைப் பிடித்தபின் தளராத நெஞ்சமுண்டோ, தந்திமுக னறுமுகன் யிருபிள்ளை யில்லையோ தந்தைநீமலடுதானோ, விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே வினையொன்று மறிகிலேனே, வேதமும் சாஸ்திர

மும் உன்னையேபுகழுதே வேடிக்கையிதுவல்லவோ, யிந்தவுலகிரேழு மேனளித்தாய் சொல்லுயினியுன்னை விடுவதில்லை, யீசனே சிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (ரு)

வனிகண்டு உன்னடியை துதிபாத போதிலும் வாஞ்சையில்லாதபோதும், வாலாயமாய்க்கோயில் சுற்றுதபோதிலும் வஞ்சமே செய்தபோதும், மொழியெகணை மொகணை யில்லாமலேபாடினும் மூர்க்கனேமுகடாகினும் மோசமேசெய்யினும் தேசமேகவரினும் முழுகாமியேயாகினும், பழியெனக்கல்லவே தாய்தந்தைக்கல்லவோ பார்த்தவர்கள் சொல்லார்களோ, பாரறியமனைவிக்கி பாதியுடலீந்தநீ பாலனைக்கார்க்கொணுதோ யெழில்பெரிய அண்டங்களடுக்கா யமைத்தநீ யென்குறைகள் தீர்த்தல் பெரிதோ, யீசனே சிவகாமிநேசனே யெனையீன்றதில்லை வாழ் நடராஜனே. (சா)

அன்னைதந்தைகளென்னை யீன்றதற்கழுவனோ அறிவிலாதவற் கழுவனோ, அல்லாமல் நான்முகன் தன்னையேனோவனோ ஆசைமூன்றுக் கழுவனோ, முன்பிறப்பென்னவினைவந்து மூளுமென்றழுவனோ முத்திவருமென்றுணர்வனோ, தன்னைநொந்தழுவனோ, உன்னைநொந்தழுவனோ தவமென்னவென் றழுவனோ, தையலர்க் கழுவ

ளே மெய்வளர்க்கழுவனே தரித்திரதிசைக்கழுவனே இன்னமென்னப்பிறவிவருமோவென்றழுவனேயெல்லா முரைக்கவருவாய், யீசனே சிவகாமிநேசனே யெனை யீன்ற தில்லைவாழ் நடராஜனே. (எ)

காயாமுன்மரமீது பூபிஞ்சறுத்தனே கன்னியர்கள் பழிகொண்டனே, கடனென்று பொருள்பறித்தேவயறெறித்தனே கிளைவழியில் முள்ளிட்டனே, தாயாருடன்பிறவிக்கென்னவினைசெய்தனே தந்தபொருளிலையென்றனே, தானென்று கெர்வித்து கொலைகளவு செய்தனே தபசிகளையேசினேனே, வாயார பொய்சொல்லி வீண்பொருள்பறித்தனே வாணரைப்பழித்திட்டனே வடவுபோலேபிறரைசேர்க்காதடித்தனே வந்தபின்யென்செய்தனே, ஈயாதலோபியென்றேபெய ரெடுத்தனே யெல்லாம்பொறுத்தருளுவாய், யீசனேசிவகாமிநேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (அ)

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன தன்பிரவியுரவுகோடி, தனமலை குவித்தென்ன, கனபெயரெடுத்தென்ன தாரணியை யாண்டுமென்ன, சேயர்களிருந்தென்ன குருவாய்திரிந்தென்ன சீஷர்க ளிருந்துமென்ன சித்துபலகற்றென்ன நித்தமும்விரதங்கள் செய்தென்ன நதிகளெல்லாம், ஓயாதுமூழ்கினும் என்னபலன் எமனேலை ஒன்றைக்கண்டுதடுக்க, உதவுமோ யிதுவெலாம் ச

ந்தையுற வென்றுதான் உன்னிருபதம்பிடித்தேன், யா ர்மீதுவுன்மன மிருந்தாலுடன்கடைக் கண்பார்வையது போதுமே, ஈசனே சிவகாமிநேசனே யெனையீன்றதில் லைவாழ் நடராஜனே. (௬)

இன்னமுஞ்சொல்லவோ உன்மனங்கல்லோ இரும் போ பெரும்பாரையோ, யிருசெவியுமந்தமோகேளாது அந்தமோ யிதுவுனக் கழகுதானே, யென்னன்னைமோ கமோ யிதுயென்னசோபமோ யிதுவேவுன்செய்கைதா னே, உன்னைவிட்டெங்கு சென்றாலும் விழலாவனன் உனையடுத்துங்கெடுவனே, ஓகோவிதின்குற்றமென்குற் றமொன்றுமில்லை யுற்றுபார் பெற்றவையா, என்குற்ற மாயினும் உன்குற்றமாயினும் பினியருளளிக்கினைவா ய், யீசனேசிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (௰)

சனிராகுகேதுபுதன் சுக்கிரன் செவ்வாய் குருச்ச ந்திரன் சூர்யநிவறை, சற்றெனக்குள்ளாக்கி ருசிபனி ரெண்டையும் சமமாய்நிறுத்தியுடனே, பனியொத்தந க்ஷத்திரங்க ளிருபத்தேழும் பக்குவப்படுத்திப்பின்னால் பகர்கின்றகரணங்கள் பதினொன்றையும்வெட்டி பாரை யும் அதட்டிஎன்முன், சனிபே லவேபேசி கெடுநினைநி

னைக்கின்ற கசடர்களையுங்கசக்கி, கர்த்தனின்தொண்டராம் தொண்டர்க்குத் தொண்டரின் தொண்டர்கள் தொழும்பனுக்கி இனியவளமறுவுசிறு மணவைமுனுசாமி யெனையாள் வதினி யுன்கடன்காண், யீசனேசிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (யக)

நடராஜப்பத்து

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

கண்டசுத்தி.

—(*)—

விருத்தம்.

பணந்தேடியாரிருந்தார் உலகமீதில்
பாவிதிரி யோதிரனும் பாட்டனரும்
குணமான துரோணனவர் கருணன்பூரி
கூறியதோர் தேத்தரசன் சகுனிசல்லி

பிணமானூர் அர்ச்சுனன்கை அம்பினலே
பெண்டிரும் பணங்காசும் பிறகேபோச்சா
மணமான வாழ்வுபொருள் ஆடுமாடும்
யாய்கையடா பொம்மலாட்டம் மதித்துப்பாரே.

ஆலித்தெழுந்து அபிராமன்மீது அணங்கலுற்றூர், பாலிக்கும்போது யென்செய்குவேன் பஞ்சபாணனன்பு தாலிக்குமே பழந்தட்டுக்குமேதனித் தொண்ணூத்தார டிதழும்புபடகூவிக்குமேவெட்டும்பெருமானிரவிகுலோத்துங்கனே. (க)

கரண்டத் தொனிக்கஞ்சிய மான்மழுக் கங்குலிலே, திரண்டவெள்ளத்தின்பிண மீது சென்றனள் சேர்ந்தவனே, அலண்ட இன்பங்கொடுமீளக்கருபற்றி அங்கொலுசால், குறண்டகன்னத்தி லுதைத்தனள் காணங்குலோத்துங்கனே. (உ)

கடிமலர்பந்துகொண்டுகணவனுங் கெதியைக்காய்ந்துஅவள், இடியெனச்சோர்ந்துவீழ்ந்தாள் யெனமுலைக்கொடியனல்லாள் அவள், முடிபதுமுடவன் கையால் அரசன்முன்பதாய்சுத்திக்கொண்டு அவள், அடிபடக்கண்டதல்ல இது அம்பலத்ததிசயந்தான், (ங)

வாறிடைபிடிங்கிமுட்டி வளறிளங் கொங்கைநல்லாள், நீர்விழி கண்கள்சோர நேரிழையெறித்துச் சென்று அவள், மார்தனை தன்னைப்பற்றி மற்றவனடியும்

பட்டு, ஆர்பேரைதழுவிக்கொண்டாள் இது அம்பலத் ததிசயந்தான். ௪)

கம்பத்துணட்டி கனவிளக்கெரிய, செம்பொன் அமுளியின்மேல் சேராமல் இந்த, புல்லூறல்வாறிபுகைச்சல் புகைந்தனளே, கல்லுருள செம்புருள முத்துருளக கண்டு (ரு)

சொன்னசொற்கேளாவேந்தன் துடியிடை மடையாள்கையில் இந்த, மன்னவன்கழுத்தருக்க மனமது துணிந்துவிட்டாள், தென்னிலைவேலனுரே திருத்தனிமலையில்வாழும், அன்னலும்நீரும்வந்து யென்அரசனையெழுப்பிடீரே. (சா)

ஜாதிமார்கந்தவிழ்ந்து ஊனுதஊனின்ற தாழ்வினைதனக்கழுவனே, தடம்பெரியமைந்தனைத் தனியவைத் தேவேந்தன் தலைகொய்ததற்கேநானழுவனே, ஆதினுள் தாலிதந்தாரியன்றனைக்கொன்ற அறவனுக்கே நானழுவனே, அக்கானகம்புகுந்து மருமன்னர் ஊர்வேசியா யானதற்கேனுனழுவனே, வேதநூல்முறையிலர்மைந்தனைத்தழுவியே வெந்ததணலுக்கு நானழுவனே, வெள்ளம் பிறந்துமே தள்ளாடி இடையரிடம் விட்டதற்கே நானழுவனே நீதியாயுலகத்தை ஒருகுடையிலாள்கின்ற நீதி மகாராஜபோஜனே, இப்பனிண்ணயமாய் விர்க்கவந்த விலைமோர்தனக்கழுவனே. (எ)

அன்றுதான் அன்னையுந் தந்தையுங்கூடியே அனுபவிப்பதும் சஞ்சலம், அங்கொறு ஜெலத்துளி தறிப்பதுஞ்சஞ்சலந் தறித்துபின் ஆளானதும் சஞ்சலம், பெண்ணையும் மண்ணையும் விரும்புவதுஞ் சஞ்சலம் பெண்டிலாதிருபதுஞ் சஞ்சலம் பெற்றமகனில்லாதிருப்பதுஞ் பெற்றபின்புஞ்சஞ்சலம், எண்ணறிய திரவியந் தேடியுஞ்சஞ்சலம் தேடாதிருப்பதுஞ் சஞ்சலம் யென்றுதான் சஞ்சலம் ஒழிந்துயான் உன்திருவடிக்காளாவனோ, விண்ணவர்தொழுங் கருணை வள்ளிதெய்வானையுடன் வாமுமயிலேறியே வரவேண்டுமெந்தனருகே. (அ)

தெலுங்கருழிசென்று தமிழ்பாடினல் மாக்குஅரவம்தெலியது ஓய்பிச்சிவாடா என்பரும், நீவுசெப்பேதி சிந்தலோ ருள்வேசிதிப்பினட்டுன்னதி செப்பலஒத்தேஎன்பரும், அலங்கொடுதுலுக்கர்தாம் அரிவில்அர்ச்சானை துமாரிபாஞ்சோதென்பரும் துலங்கும் கன்னடர்கதாம் குங்குமத்தோதுமதுதெளிதல்லவே, ஒந்துகாசாருகொட்டாருசுன்னிகோ ஒவென்பரும், நிலையானபுவியாளும் இங்கிலீஷ்காரரும் டமிள்னோகோ வென்பரும் இவரெலாம் இத்தமிழ்க் குறியவருவரோ சொல்லுமென் அற்புதநடராஜனே. (கூ)

கண்டசுத்தி-முற்றிற்று.